# காஞ்சிபுரம் பெருநகராட்சி
# கூட்ட எண்.17/2019-20

## 2020-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி செவ்வாய் கிழமை மாலை 4.00 மணிக்கு நடந்த சாதாரணக் கூட்டத்தின் நடவடிக்கைகள்.

### முன்னிலை
### திருமதி.ரா. மகேஸ்வரி, பி.காம்.,
### தனி அலுவலர்

**1.** காஞ்சிபுரம் பெருநகராட்சியில் அனைத்து பிரிவுகளிலும் பொது மக்கள், வணிகர்கள் மற்றும் நகராட்சி பணியாளர்களால் நகராட்சி நிர்வாகம் மீது சொத்துவரி, தொழில் வரி, குடிநீர் கட்டணம், குத்தகை இனங்கள் மற்றும் பல்வேறு இனங்கள் குறித்து வழக்குகள் தொடரப்படுகின்றன. அவ்வழக்குகளில் நகராட்சி சார்பாக வாதாட நகராட்சி வழக்கறிஞர் மற்றும் அரசு வழக்கறிஞர்களுக்கு வழக்கு கட்டணம் **(Advocate Fees)** வழங்க வேண்டியுள்ளதால் **2020–21** ஆம் ஆண்டிற்கு வழக்கு கட்டணம் செலுத்தவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :–

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண். /2020/அ1)

தீர்மானம் எண்.469 அனுமதி அளிக்கப்பட்டது.

**2.** காஞ்சிபுரம் பெருநகராட்சி அலுவலக நகரமன்ற கூடத்தில் உள்ள EB மெயின் போர்டு பழுதடைந்துள்ளதால் சீரான மின்சப்ளை வருவதில்லை. எனவே மேற்படி கூடத்தில் உள்ள EB மெயின் போர்டினை மாற்றியமைத்து இதர மின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.3695/**2020/இ1**)

தீர்மானம் எண்.470 அனுமதி அளிக்கப்பட்டது.

**3.** காஞ்சிபுரம் நகர பொது மக்களுக்கு தினசரி வழங்கிடும் குடிநீரை சுத்திகரிப்பு செய்து பாதுகாப்புடனும் சுகாதாரத்துடனும் வழங்கிட தேவையான கிருமி நாசினியான சோடியம் ஹைப்போ குளோரைட் திரவ பீளிசிங் சொலுயூசன் விநியோகம் செய்து இதன் மோட்டார், பம்பு இனணந்த லையன்கள் பராமரிப்பினை வேகவதி நீர்பணியிடம் மற்றும் பாலாறு தலைமை நீர்பணியிடம் பணிகள் எப்ரல்-2020 இரண்டாம் வாரம் உடன் ஐந்து மாதகாலத்திற்கு ஆகும் செலவினம் ரூ.9.90 இலட்சம் ஆகும்.

மேலும் தற்போது கொரோனா, கோவிட்-19 வைரஸ் பரவிவரும் காலமாக இருப்பதால் அவசர அவசியம் கருதி தற்போது மன்றத்தால் அனுமதிக்கப்பட்ட விலை விகிதம் ரூ.14.00 லிட்டர் (மன்ற தீர்மானம் எண்.242 நாள்.31.10.2019) பராமரிப்பு நிறுவனம் மெசர்ஸ் ஸ்ரீராஜ கணபதி எஞ்சினியரிங் ஒர்க்ஸ் மூலம் வரும் ஐந்து மாத்திற்கு நீடிப்பு செய்திடவும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.03655/2019/இ3)

தீர்மானம் எண்.471 அனுமதி அளிக்கப்பட்டது.

**4.** காஞ்சிபுரம் பெருநகராட்சியின் எல்லைக்குட்பட்ட சின்னையன் குளம் பகுதியில் உள்ள நத்தப்பேட்டை கூட்டு குடிநீர் நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள திரவ குளோரின் இயந்திரம் பொருத்தப்பட்டு விநியோகிக்கப்படும் குடிநீரில் திரவ குளோரின் கலக்கப்படுகிறது.தற்பொழுது திரவ குளோரின் இருப்பு குறைவாக உள்ளது. மேலும் பொது மக்கள் எதிர்பாராத சமயத்தில் வயிற்றுப் போக்கு மற்றும் பாக்டீரியா தாக்குதலுக்கு உள்ளாக நேர்வதால் திரவ குளோரின் குடிநீரில் கலந்து விநியோகிக்க வேண்டிய கட்டாய சூழ் நிலையில் இருப்பதால் திரவ குளோரின் வாங்க ஓராண்டிற்கு உத்தேச செலவீனம் ரூ.3.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :-

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் எண்.472 அனுமதி அளிக்கப்பட்டது.

**5.** காஞ்சிபுரம் பெருநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தற்சமயம் பயன்பாட்டில் உள்ள கீழ்கண்ட வாகனங்களை அதன் பராமரிப்பு நிறுவனமான திருவாளர் காம்-அவிடா என்விரோ என்ஜினியர்ஸ் (பி) லிட், புனே நிறுவனம் இந்நகரமன்ற தீர்மான எண்.435, நாள். 31.01.2012-ன்படி கீழ்கண்ட விலை விகிதத்தில் (வாகனம் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ஆகும் எரிபொருள், வாகன ஓட்டுநர், ஆபரேட்டர் கூலி மற்றும் பராமரிப்பு செலவுகள் உட்பட) பராமரிக்கப்பட்டு வந்தது.

| | | |
|---|---|---|
| TN 21 AM 3216 | : | Mini Compactor |
| TN 21 AM 3292 | : | Mini Compactor |
| TN 21 AM 3294 | : | Big Compactor |
| TN 21 BC 3727 | : | Mini Compactor |
| TN 21 BC 3749 | : | Mini Compactor |
| TN 21 BC 3261 | : | Mini Compactor |
| TN 21 BC 3290 | : | Mini Compactor |
| TN 21 AM 8082 | : | Hook Loader |

தற்போது மேற்படி வாகனங்களின் பராமரிப்பு காலம் நகரமன்ற தீர்மானம் எண்.142/ 01.01.2020-ன்படி 29.03.2020 அன்றுடன் முடிவடைகிறது. எனவே இவ்வாகனத்தை இயக்க நகராட்சியில் போதிய நிரந்த ஓட்டுநர்கள் இல்லாத நிலையில் பொதுசுகாதாரப் பணிகள் தடையில்லாமல் நடைபெறவும், அவசர அவசியம் கருதி ஏற்கனவே பராமரித்து இயக்கி வரும் நிறுவனமான திருவாளர் காம்-அவிடா என்விரோ என்ஜினியர்ஸ் (பி) லிட், புனே, என்ற நிறுவனத்தால் மேலும் **30.03.2020** முதல் 26.06.2020 வரை ஏற்கனவே இயக்கி பராமரிக்கும் விலை வீதத்திலேயே மீண்டும் இயக்கி பராமரிக்கவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.24.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியினை ஏற்கனவே பரரிமரித்து வரும் நிறுவனமான திருவாளர் காம்-அவிடா என்விரோ என்ஜினியர்ஸ் (பி) லிட், புனே நிறுவனத்திற்கு ஏற்கனவே ஒப்புதல் அளித்த விலை விகிதத்தின் அடிப்படையில் பணியை ஒப்படைப்பதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
3. இப்பணிக்காகும் தொகையினை நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.9316/2015/எச்1)

தீர்மானம் எண்.473 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**6.** காஞ்சிபுரம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் கொரோனா –19 நோய் தடுப்பு பணிகள் குறித்து விழிப்புணர்வு மற்றும் அரசின் செயல்பாடுகளை பொது மக்களுக்கு தெரிவிக்கும் வண்ணம் 5 ஆட்டோக்கள் மூலம் நகர் முழுவதும் ஒலிபெருக்கி மூலம் நாள் ஒன்றுக்கு வாடகை அடிப்படையில் விளம்பரம் செய்ய **24.03.2020** அன்று அறிவிப்பு வழங்க கோரியதில் வரப்பெற்ற மூன்று அறிவிப்புகளின் கீழ்க்கண்ட விவரப்படி பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விலைப்புள்ளி வழங்கிய நிறுவனங்கள் | ஆட்டோ விளம்பரம் கூலி உட்பட நாள் ஒன்றுக்கு வாடகை) ரூ |
|---|---|---|
| 1 | திரு. P. பன்னீர்செல்வம் | ரூ.2900/– |
| 2 | திரு. S. குணசேகரன் | ரூ.2980/– |
| 3 | திரு. A. முருகன் | ரூ.3100/– |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் அனைத்து இனங்களுக்கும் குறைந்த விலை விகிதம் வழங்கியுள்ள திரு. P. பன்னீர்செல்வம் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.3965/2020/எச்1)

தீர்மானம் எண்.474 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது

**7.** காஞ்சிபுரம் நகராட்சிக்குட்பட்ட மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் தெரிவித்தவாறு அனைத்து வார்டுகளிலும் கொரோனா–19 நோய் தடுப்பு பணிகளுக்காக பொது மக்களை தனிமைப்படுத்தபட்டதின் பொது மக்கள் அவரவர் வசிக்கும் பகுதிகளுக்கு அத்தியாவசிய பொருட்களான காய்கறி வகைகள் கிடைக்கும் வகையில், TATA ACE மினிலாரி அடிப்படையில் 17 TATA ACE மினிலாரி மூலம் நாள் ஒன்றுக்கு வாடகை அடிப்படையில் காய்கறிகள் எடுத்து செல்ல அதற்காகும் தோராய செலவினம் ரூ.5.00 இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை எடுக்கவும் மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.3965/2020/எச்1)

தீர்மானம் எண்.475 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது

**8.** காஞ்சிபுரம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் கொரோனா–19 நோய் தடுப்பு பணிகள் குறித்து விழிப்புணர்வு மற்றும் அரசின் செயல்பாடுகளை பொது மக்களுக்கு தெரிவிக்கும் வண்ணம் 5 ஆட்டோக்கள் மூலம் நாள் ஒன்றுக்கு வாடகை அடிப்படையில் விளம்பரம் செய்யவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.5.00 இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை எடுக்கவும் மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** ( ந.க.எண்.3965/2020/எச்1)

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் எண்.476 அனுமதி அளிக்கப்பட்டது

**9.** காஞ்சிபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21-ல் உள்ள குப்புசாமி நகராட்சி தொடக்கப் பள்ளியில் அமைந்துள்ள சமையல் அறையில் சமையல் மேடை (Kitchen Platform) அமைத்தல், தரைத்தளம் சரி செய்தல் மற்றும் வண்ணம் பூசி புதுப்பிக்குமாறு கோரப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணியினை மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.3695/2020/இ1)

தீர்மானம் எண்.477 அனுமதி அளிக்கப்பட்டது

**10.** காஞ்சிபுரம் நகராட்சியின் பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் குடிநீர் வாகனம் எண். **TN 21G 0147-க்கு** பழுதுகள் பார்த்து தகுதி சான்று பெற்று தருதல் 11.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | வேலையின் பெயர்கள் | உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. | விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | விலைப்புள் ளி தொகை (ரூபாய்) | குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | நகராட்சியின் குடிநீர் வாகனம் எண்.TN 21 G 0147-க்கு பழுதுகள் பார்த்து தகுதி சான்று பெற்று தருதல் | 3,70,000/- | M/s Sai Raghavendra Industries, Chennai-98 | 3,61,080/- | குறைவு |
| | | | M/s Ultrajet Cleaning System Pvt. Ltd., Maraimalai Nagar | 3,66,000/- | அதிகம் |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :-

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.644/2020/இ2)

தீர்மானம் எண்.478 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது

**11.** காஞ்சிபுரம் நகராட்சியின் பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் கழிவுநீர் உறிஞ்சும் வாகனம் எண். TN 21 G 0146 க்கு பழுதுகள் பார்த்து தகுதி சான்று பெற்று தருதல் 06.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | வேலையின் பெயர்கள் | உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. | விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | விலைப்புள் ளி தொகை (ரூபாய்) | குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | நகராட்சியின் கழிவுநீர் உறிஞ்சும் வாகனம் எண். TN 21G 0146 க்கு பழுதுகள் பார்த்து தகுதி சான்று பெற்று தருதல். | 4,55,000/- | M/s Sai Raghavendra Industries, Chennai-98 | 4,51,940/- | **குறைவு** |
| | | | M/s Ultrajet Cleaning System Pvt. Ltd., Maraimalai Nagar | 4,60,200/- | **அதிகம்** |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.10134/2020/இ2)

தீர்மானம் எண்.479 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது

**12.** காஞ்சிபுரம் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டிப்பர் லாரி எண். TN 21 BC 6265-க்கு 2019-20ம் ஆண்டு தகுதிச்சான்று பெற வேண்டி பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ள 05.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஸ்ரீ ஜோதிமுருகன் மோட்டார் ஒர்க்ஸ், சேலம் | 2,32,650.00 |
| 2 | இலட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர், சேலம் | 2,19,965.00 |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர் இலட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர், சேலம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.12038/2019/எச்1)

தீர்மானம் எண்.480 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது

**13.** காஞ்சிபுரம் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டிப்பர் லாரி எண். TN 21 BC 5371-க்கு 2019-20-ம் ஆண்டு தகுதிச்சான்று பெற வேண்டி பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ள 05.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஸ்ரீ ஜோதிமுருகன் மோட்டார் ஒர்க்ஸ், சேலம் | **1,25,700 . 00** |
| 2 | இலட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர், சேலம் | **1,19,965 . 00** |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர் இலட்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ், மேட்டூர், சேலம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.12493/2019/எச்1)

தீர்மானம் எண்.481 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது

**14.** காஞ்சிபுரம் பெருநகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்த விவர அறிக்கையினை மாலை தமிழகம் நாளிதழில் 01.02.2020 அன்று விளம்பரம் செய்தமைக்கு **"MAALAI TAMIZHAGAM, Chennai-92"**. அவர்களிடம் இருந்து வரப்பட்டுள்ள விளம்பர செலவினப் பட்டியல் (CGST&SGST வரிகள் உள்பட) தொகை ரூ.25,200/- (ரூபாய் இருபத்தைந்தாயிரத்து இருநூறு மட்டும்) மேற்படி நிறுனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.6795/2019/இ1)

தீர்மானம் எண்.482 அனுமதி அளிக்கப்பட்டது.

**15.** காஞ்சிபுரம் நகராட்சி சத்துணவு பிரிவில் கீழ்கண்ட சத்துணவு மையங்களுக்கு எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்புகள் பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ள விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | கே.மதியழகன்,நெ.28,2–வது குறுக்குதெரு,ரத்னா நகர்,பாண்டி | 1000.00 |
| 2 | கலாம் சேல்ஸ் & சர்வீஸ், நெ.246, நடுத்தெரு, விழுப்புரம் | 1250.00 |
| 3 | அல்பா டிரேடர்ஸ், நெ.23,பங்காரதெரு, கலவை | 1300.00 |

**அலுவலகக் குறிப்பு :–**

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள கே.மதியழகன், பாண்டி நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(நக.எண்.4807/2015/சி3)**

தீர்மானம் எண்.483 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது

**16.** காஞ்சிபுரம் பெருநகராட்சி அலுவலகத்தில் மின் தடைகள் ஏற்படும் போது தடையின்றி பணிகள் நடைபெற **62.5** கே.வி.ஏ ஜெனரேட்டர் **3/2013**-ல் நிறுவப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகின்றது.

இதன் பராமரிப்பு பணிகள் (AMC) அங்கீகாரம் பெற்ற டீலர் மெசர்ஸ் சக்ரபானி இஞ்சினியரிங் ஓர்க்ஸ் காஞ்சிபுரம் நிறுவனத்தால் செய்யப்பட்டு வருகின்றது. பராமரிப்பு காலம் பிப்ரவரி-2019 உடன் முடிவடைகின்றது. அலுவலகப்பணிகள் அவசியம் கருதி வரும் ஓராண்டிற்கு பராமரிப்பு பணிகள் செய்திடவும், ஆயில் சர்வீஸ் செய்திடவும் அங்கீகாரம் பெற்ற மேற்படி நிறுவனத்திடம் விலை விவரம் பெறப்பட்டது. உத்தேச செலவினம் ரூ.15,000/- ஆகும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

மேற்படி பணிகள் அங்கீகாரம் பெற்ற டீலரிடம் செய்திடவும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு** :-

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் எண்.484 அனுமதி அளிக்கப்பட்டது

**17.** **2020**-ம் ஆண்டிற்கு இவ்வலுவலக உபயோகத்திற்குத் தேவையான எழுது பொருட்கள், படிவங்கள், கேட்பு அறிப்புகள் மற்றும் பதிவேடுகள் ஆகியவற்றை அச்சடித்துக் கொள்ளவும், கணினி மற்றும் தட்டச்சு பிரிவிற்குத் தேவையான பொருட்கள் வாங்கிக் கொள்ளவும் 2020-2021-ம் ஆண்டிற்கு பொது நிதியிலிருந்து ரூ.35.00 இலட்சமும், குடிநீர் வடிகால நிதியிலிருந்து ரூ.5.00 இலட்சம் மதிப்பில் அவ்வப்போது தேவைக்கேற்ப, தேவைப்படும் சமயத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் அச்சிட்டும், வாங்கிக் கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :-

மன்றம் அனுமதி அளிக்கலாம் (ந.க.எண்.3870/2020/பி6)

தீர்மானம் எண்.485 அனுமதி அளிக்கப்பட்டது

**18.** இந்நகராட்சிக்கு உட்பட்ட திருவீதிபள்ளம் பகுதியில் கார், வேன், பஸ் நிறுத்தும் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 2020-2021 ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை அனுபவித்து கொள்ளும் உரிமை (அரசாணை எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.09.2008) இனத்திற்கு 20.03.2020 அன்று மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. ஏலத்தில் கீழ்கண்ட 5 நபர்களும் ஒப்பந்தப்புள்ளி கீழ் கண்ட 1 நபரும் கலந்து கொண்டனர் கோரப்பட்ட ஏலத்தொகை மற்றும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | குத்தகை விவரம் | ஏலத்தில் கலந்து கொண்டவர் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துக் கொண்டவர்களின் பெயர் மற்றும் முகவரி | கோரிய ஏலதொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | திருவீதிபள்ளம் பகுதியில் கார், வேன், பஸ் நிறுத்தம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | பி.ஹரிகிருஷ்ணன்<br>S/O. R.T. பெருமாள்,<br>1பி/1 ராயங்குட்டை தெரு<br>பெரிய, காஞ்சிபுரம். | ஏலக்கேள்வி கோரவில்லை, |
| | | எம்.ஜெயா,<br>W/O, R. மணி<br>27/B, குள்ளப்பன் தெரு,<br>பெரிய காஞ்சிபுரம். | ஏலக் கேள்வி கோரவில்லை |
| | | R.வேல்முருகன்<br>S/O, ராமு<br>12 சேஷாத்திரிபாளையம்,<br>காஞ்சிபுரம். | ரூ.8,10,000/- ஏலத் தொகை |
| | | வி.கமலக்கண்ணன்,<br>த./பெ.ஜி.வரதன்,<br>71/27சி.என். அண்ணாதுரை தெரு,<br>காஞ்சிபுரம். | ரூ.8,05,000/- ஏலத் தொகை |
| | | ஆர். பொன்னம்பலம்,<br>42எ, ஜீயர், நாராயணபாளையம் தெரு,காஞ்சிபுரம். | ரூ.8,15,000/- ஏலத் தொகை |
| | | எஸ்.செல்வம்,<br>த/பெ.ஜி.சாரங்கன்,<br>148பி, இந்திரா அவின்யூ, அசோக் நகர், காஞ்சிபுரம். | ரூ.8,20,000/- ஏலத் தொகை |

**அலுவலக குறிப்பு** :-

மேற்கண்ட இனத்திற்கு இருநபர்கள் ஏலத்தொகை கோரவில்லை மூன்று நபர்கள் மேற்கண்டவாறு ஏலத்தொகை கோரினர் ஒரு நபர் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் ரூ.8,20,000/-ல் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எஸ்.செல்வம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஊர்ஜீதம் செய்யலாம்.

தீர்மானம் எண்.486 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது

**19.** காஞ்சிபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21 சேக்குப்பேட்டை கவரை தெருவில் உள்ள சிமெண்ட் சாலையானது பழுதடைந்து குண்டும், குழியமாக உள்ளதாக வந்த பொதுமக்களின் புகாரின் அடிப்படையில் மேற்கண்ட இடம் நேராய்வு செய்ததில், பழுதடைந்த சிமெண்ட் சாலையை Patch Work செய்து சீரமைக்க உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கும் மன்றதின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :-

மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண்.487 அனுமதி அளிக்கப்பட்டது

**20.** காஞ்சிபுரம் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட பாலாறு நீர் படுகையில் இந்நிதியாண்டில் வறட்சியின் காரணமாக ஏற்படும் தண்ணீர் தட்டுபாட்டை குறைக்க வார்டு எண்.49, செவிலிமேடு மற்றும் வார்டு எண்.50, வெங்கடாபுரம் பகுதியில் புதியதாக மணல்மேடு தடுப்பணையை கட்ட ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :-

மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண்.488 அனுமதி அளிக்கப்பட்டது

**21.** காஞ்சிபுரம் பெருநகராட்சியில் பொது நிதியின்கீழ் கீழ்க்காணும் பணியினை மேற்கொள்ள 20.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.லட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு / திருமதி / M/s | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| 1 | வார்டு எண்.48, 43 உத்திரமேரூர் கீழ்ரோடு, மிலிடெரி ரோடு முடிய, வார்டு எண்.48 காமாட்சியம்மன் காலனி, வார்டு எண்.32 விளக்கடி கோயில் தெரு, வார்டு எண்.31 கருக்கினில் அமர்ந்தவள் கோயில் தெரு, வார்டு எண்.32 கலெக்டர் ஆபிஸ் (பாலம் அருகில்) வேகவதி ஆறு இணைப்பு, தாயார்குளம் (வேகவதி கால்வாய் அருகில்), வார்டு எண்.27 திருக்காலிமேடு முதல் குப்பை கிடங்கு வரை, வார்டு எண்.40 திருச்சோலை தெரு முதல் குப்பை கிடங்கு வரை, வார்டு எண்.39 அண்ணாதுரை தெரு, வார்டு எண்.47 மிலிடெரி ரோடு அம்பேத்கார் சிலை முதல் சின்னையன் குளம் வரை, வார்டு எண்.30 மடம் தெரு, அண்ணா பார்க் பகுதி ஆகிய இடங்களில் சாலைகளில் ஓரம் உள்ள மண்ணை JCB மற்றும் டிப்பர் லாரி கொண்டு அப்புறப்படுத்தும் பணி. | 3.00 | M.சேகர் | - | 0.22% |
| | | | V. பார்த்திபன் | 0.49 % | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | வார்டு எண்.20, கச்சவேஸ்வரர் கோயில் சுற்றிலும், வார்டு எண்.20 வணிகர் வீதி இருபுறமும், வீரமாகாளியம்மன் கோயில் தெரு, வார்டு எண்.19 மாண்டுகண்ணீஸ்வரர் கோயில் தெரு, பல்லவர் மேடு, வார்டு எண்.41 பச்சையப்பன் கல்லூரி சாலை (NCC மைதானம்), வார்டு எண்.8, கிருஷ்ணன் தெரு, பழைய ரயில் நிலையம் அருகில், வார்டு எண்.21 அன்னை இந்திரா காந்தி சாலை, வார்டு எண்.26, திருக்காலிமேடு, முருகன் குடியிருப்பு பெரியார் நகர் ஆகிய இடங்களில் சாலைகளில் ஓரம் உள்ள மண்ணை JCB மற்றும் டிப்பர் லாரி கொண்டு அப்புறப்படுத்தும் பணி. | 3.00 | M.சேகர் | - | 0.21% |
| | | | V. பார்த்திபன் | 0.55 % | - |

**அலுவலக குறிப்பு** :–

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.**6904/2018**/இ1)

தீர்மானம் எண்.489 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**22.** இந்நகராட்சியில் வணிக உபயோக புதை வடிகால் இணைப்பு பெற்று பயன்படுத்திவந்த கீழ்கண்ட பயனாளிகள் தற்பொழுது தங்களது கட்டிடங்களை வணிக பயன்பாட்டிலிருந்து குடியிருப்பாக மாற்றிவிட்டதாக தெரிவித்து, 2020–21ம் ஆண்டு முதல் புதை வடிகால் கட்டணத்தை குடியிருப்பு வகைபாடாக மாற்றி வழங்குமாறு விண்ணப்பித்துள்ளனர்.

| **வ. எண்** | **பெயர்** | **முகவரி** | **புதை வடிகால் இணைப்பு எண்** |
|---|---|---|---|
| 1 | G. கிருஷ்ணன் | 21, பாக்ராபேட்டை தெரு | 008/23497 |
| 2 | சுப்பிரமணி ஷா | **27,** பி.எஸ்.கே. தெரு | 008/21386 |
| 3 | S. கிருஷ்ணவேணி | **34,** ரெட்டிப்பேட்டை தெரு | 008/22126 |
| 4 | மங்களம்மாள் | 27A, தும்பவனம் அருணாச்சலம் தெரு | 008/23447 |
| 5 | K. மகாலட்சுமி | 58E/8A1, காமராஜர் தெரு | 008/73142 |
| 6 | T. சந்திரா | **63/3,** திருவேகம்பன் தெரு | 008/65105 |
| 7 | முத்து நாகப்பன் | **14,** வழக்கறுத்தீஸ்வரர் கோயில் தெரு | 008/24613 |
| 8 | S. செல்வம் | 16C, மாதனம்பாளையம் தெரு | 008/14636 |

மேற்படி விண்ணப்பதாரர்கள் கோரிக்கையின்படி வருவாய் பிரிவு அலுவலர்கள் மற்றும் உதவி பொறியாளர்கள் நேரில் சென்று ஆய்வு செய்ததில் தற்பொழுது குடியிருப்பு கட்டிடமாக இருப்பது உறுதி செய்யப்பட்டது. மேலும் மார்ச் 2020 வரை புதை வடிகால் கட்டணங்களை நிலுவையின்றி செலுத்தியுள்ளார்கள். எனவே மேற்படி புதை வடிகால் இணைப்புகளை வணிக உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோகமாக மாற்றி கணினி கேட்பில் திருத்தம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க,எண்.2925/2020/இ5)

தீர்மானம் எண்.490 அனுமதி அளிக்கப்பட்டது.

**23.** காஞ்சிபுரம் பெருநகராட்சியில் பொது நிதியின்கீழ் கீழ்க்காணும் பணியினை மேற்கொள்ள 24.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.லட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு / திருமதி / ஆ/ள | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| 1 | 29–வது வார்டு காந்தி ரோடு மற்றும் வழக்கறுத்தீஸ்வரர் கோயில் தெரு, 44–வது வார்டு பூந்தோட்டம் ஆகிய பகுதிகளில் புதியதாக குடிநீர் குழாய் மாற்றியமைத்தல். | 2.00 | A.V. எண்டர்பிரைசஸ் | - | 0.12% |
| | | | K. ஆறுமுகம் | 1.21% | - |
| 2 | 4–வது வார்டு வைகுண்டபுரம் தெருவில் புதியதாக குடிநீர் குழாய் மாற்றியமைத்தல். | 1.60 | A.V. எண்டர்பிரைசஸ் | - | 0.11% |
| | | | K. ஆறுமுகம் | 1.93% | - |

**அலுவலக குறிப்பு :–**

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1143/2020/இ1)**

தீர்மானம் எண்.491 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**24.** காஞ்சிபுரம் பெருநகராட்சியில் பொது நிதியின்கீழ் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள 27.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.லட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு / திருமதி / M/s | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| 1 | வார்டு எண்.42, 45, 46 மற்றும் 47 ஆகிய வார்டுகளின் விரிவாக்க பகுதிகளில் குடிநீர் பிரதான மற்றும் பகிர்மான குழாய்கள் பதித்தல். | 9.90 | K. பாண்டியன் | 1.11% | - |
| | | | V. பார்த்திபன் | - | 0.74% |
| 2 | வார்டு எண்.28, 40 மற்றும் 41 ஆகிய வார்டுகளின் விரிவாக்க பகுதிகளில் குடிநீர் பிரதான மற்றும் பகிர்மான குழாய்கள் பதித்தல். | 9.90 | K. பாண்டியன் | - | 0.41% |
| | | | S. அமுதா | 1.91% | - |

1) மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது-

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண். /2020/இ1)**

தீர்மானம் எண்.492 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**25.** இந்நகராட்சியில் கீழ்கண்ட முகவரியில் உள்ள புதை வடிகால் இணைப்பு கேட்பு எழுப்பப்பட்டு நாளது வரை கட்டணம் நிலுவையாக இருந்து வருகிறது. இந்நிலையில் மேற்படி இடத்தின் உரிமையாளர்கள் அந்த முகவரியில் எவ்வித கட்டிடமும் இல்லாமல் காலியிடமாகவே இருந்து வருவதாகவும், புதை வடிகால் இணைப்பு இல்லை எனவும் தெரிவித்து அந்த இடத்திற்கு நகராட்சியால் கேட்பு எழுப்பப்பட்ட புதை வடிகால் இணைப்பினை நீக்கம் செய்யவும், அதற்கான நிலுவை தொகைகளை ரத்து செய்யவும் கோரியுள்ளார். அதன்படி இந்நகராட்சியின் உதவி / இளநிலை பொறியாளரால் நேராய்வு செய்யப்பட்டதில் அந்த முகவரியில் கட்டிடம் ஏதும் இல்லாமல் தற்பொழுது காலியிடமாக உள்ளதும், புதை வடிகால் இணைப்பு இல்லாமல் உள்ளதும் உறுதி செய்யப்பட்டது. எனவே மேற்படி புதை வடிகால் இணைப்புகளை **2020–21** ம் ஆண்டு முதல் கேட்பு எழாதவாறு நிறுத்தி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பெயர் | முகவரி | புதை வடிகால் இணைப்பு எண் |
|---|---|---|---|
| 1 | P.K. கந்தசாமி சா | 415, காந்தி ரோடு | 008/029/00461 |
| 2 | S.R. மெஹபூப்கான் | 28A, தும்பவனம் அருணாச்சலம் தெரு | 008/024/00562 |
| 3 | R. சகுந்தலா | 109, காந்தி ரோடு | 008/029/00166 |
| 4 | K. மீனாட்சி | 13A/5-6, காமராஜர் தெரு | 008/19023<br>008/19024 |
| 5 | G. கோபாலகிருஷ்ணன் | 16A, காமராஜர் தெரு | 008/021/00031 |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.**2951/2020**/இ**5**)

தீர்மானம் எண்.493 அனுமதி அளிக்கப்பட்டது.

**26.** காஞ்சிபுரம் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டிப்பர் லாரி எண். TN 21 BC 6244-க்கு 2019-20-ம் ஆண்டு தகுதிச்சான்று பெற வேண்டி பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ள 05.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|
| 1 | ஸ்ரீஜோதிமுருகன் மோட்டார் ஓர்க்ஸ், சேலம் | 2,10,300.00 |
| 2 | இலட்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ், மேட்டூர், சேலம் | 1,99,965.00 |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர் இலட்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ், மேட்டூர், சேலம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.11531/2019/எச்1)

தீர்மானம் எண்.494 அலுவலக குறிப்பின்படிஒப்புதல்அளிக்கப்பட்டது

**27.** காஞ்சிபுரம் நகராட்சி பகுதியில் தெரு நாய்கள், பன்றிகள் மற்றும் மாடுகள் சுற்றித் திரிந்து பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்படுத்தி தொற்று நோய்கள் பரவும் வாய்ப்புகள் உள்ளதால் அவைகளை பிடித்து அப்புறப்படுத்தவும், 51 வார்டு பகுதிகளிலும் உள்ள தெரு நாய்களை பிடித்து அவைகளின் இனப்பெருக்கத்தை தடை செய்ய வேண்டி அறுவை சிகிச்சை மேற்கொள்ள ஏதுவாக தகுதியான நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று அதனடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும், அதற்கான தோராய செலவினம் ரூ.9.00 இலட்சம் நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

மன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண்**.11291/19/**எச்**1)

தீர்மானம் எண்.495 அனுமதி அளிக்கப்பட்டது

**28.** காஞ்சிபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 51 வார்டுகளில் குடிநீர் இணைப்பு இரட்டை வரி விதிப்பு மற்றும் ஏற்கனவே துண்டிப்பு செய்யப்பட்ட குடிநீர் ,இணைப்புகள் கணினியில் வருட வருடம் கேட்பு எழுப்பப்பட்டு வருகிறது. குறிப்பிட்ட வரி விதிப்பு எண்களை நேராய்வு செய்ததில் ரூ.5,58,428/- ஐ தள்ளுபடி செய்யவும் மற்றும் கேட்பினை கணினியில் இருந்து நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது-

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி அளிக்கலாம். **(ந.க.எண்.2260 /2020/E4)**

தீர்மானம் எண்.496 அனுமதி அளிக்கப்பட்டது

**29.** இந்நகராட்சியின் ஆணையர் அவர்களின் ஈப்பு வாகனம் எண் TN 21 AL 5848 - ன் குளிப்பதனப் பெட்டி (A/C) பழுதடைந்துள்ளதால் அதனை மாற்றியமைத்திட உதவி பொறியாளர் அவர்களின் அளித்த குறிப்பின் பேரில் ஆகும் தோராய செலவினம் ரூ.25,000/- க்கு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர மன்றத்தின் தனி அலுவலரின் முன் அனுமதியை பெற்றும் குறுகியகால விலைப்புள்ளி கோரவும் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**(ந.க.எண்**.2601 /2020/E2)

தீர்மானம் எண்.497 அனுமதி அளிக்கப்பட்டது

**30.** காஞ்சிபுரம் பெருநகராட்சியின் ஆணையர் பயன்பாட்டிலுள்ள ஈப்பு வாகனம் எண்.TN 21 AL 5848 குளிர்பதனப்பெட்டி (A/c) பழுது நீக்கி மாற்றியமைத்திட விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

1. M/s Narayanamoorthy Auto Mobiles, Kancheepuram - Rs.23,300/-
2. M/s A to Z Auto Air Condition, Kancheepuram - Rs.23,400/-
3. M/s Shiva Auto Air Condition, Kancheepuram - Rs.22,650/-

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s Shiva Auto Air Condition, Kancheepuram என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு** :-

மன்றம் அனுமதி அளிக்கலாம். (**ந.க.எண்**.2601 /2020/E2)

தீர்மானம் எண்.498 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது

நகராட்சி அலுவலகம்.
காஞ்சிபுரம்.
**நாள்:– 31.03.2020.**

(ஒம்) ரா. மகேஸ்வரி,
தனி அலுவலர்,
காஞ்சிபுரம் பெருநகராட்சி

// உண்மை நகல் //